DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | **:** | **97/2022** |
| **Deposition of witness for** | **:** | **Plaintiff** |
| **Serial No. of Witness** | **:** | **PW3** |
| **Name** | **:** | மாதவன் |
| **Father Name** | **:** | ராமராஜன் |
| **Village** | **:** | சென்னை |
| **Taluk** | **:** | செங்கல்பட்டு |
| **Age** | **:** | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 31.07.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். 21.06.2018 ம் தேதியில் எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்படுத்திய உயில் ஆவணம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தில் நான் 2 வது சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். அதில் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்தது என் மனைவி. உயில் ஏற்படுத்தும் சமயத்தில் கோபாலகிருஷ்ணன் நல்ல நிலையில் தான் இருந்தார். வா.சா.ஆ 10 உயில் ஆவணத்தில் 2 வதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுஅது **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

உயில் எழுதிய கோபாலகிருஷ்ணனை எத்தனை ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். உயில் எழுதுவதற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பு கோபாலகிருஷ்ணனை பார்த்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு பார்த்தேன். நான் கோபாலகிருஷ்ணனை உயில் எழுதுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பார்த்த போது உயில் எழுத விரும்புவதாக சொன்னாரா என்றால் இல்லை. உயில் ஆவணத்தில் சாட்சியாக நான் இருக்க

வேண்டும் என கோபாலகிருஷ்ணன் என்னை நேரடியாக கேட்டாரா என்றால் இல்லை. இதற்கு முன்பு கோபாலகிருஷ்ணன் எழுதிய வேறு ஆவணங்களில் சாட்சியாக நான் இருந்துள்ளேனா என்றால் இல்லை. உயிலில் கோபாலகிருஷ்ணன் கையொப்பம் இடும் சமயத்தில் நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை நாங்கள் செல்வதற்கு முன்பே கோபாலகிருஷ்ணன் கையொப்பம் செய்து உயிலை வைத்திருந்தார்.

நான் யார் முன்னைிலையில் உயிலில் கையொப்பம் செய்தேன் என்றால் கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் உயிலில் கையொப்பம் செய்தேன். நான் உயிலில் கையொப்பம் செய்த பிறகு கோபாலகிருஷ்ணன் உயிலில் எந்த விவரத்தையும் சேர்த்து திருத்தம் செய்தாரா என்றால் இல்லை. கோபாலகிருஷ்ணன் அவருடைய சொத்து விவரங்கள் பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார் உயிலில் கையொப்பம் செய்வதற்கு முன்பு உயில் விவரங்களை வாசித்து காண்பித்தார். நாங்கள் உயிலில் கையொப்பம் இடும் பொழுது புகைப்படங்கள் வீடியோ எடுத்தார்களா என்றால் இல்லை. உயிலில் சாட்சியாக கையொப்பம் செய்வதற்கு பணம் பொருள் எதுவும் சன்மானமாக கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு வாதியிடம் வழக்கு விவரங்களை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. உயில் எப்படி தயாரிக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் கோபாலகிருஷ்ணன் தயார் செய்து வைத்திருந்தார். உயிலில் ஒவ்வொரு பக்கமும் கோபாலகிருஷ்ணன் செய்த கையொப்பத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் உயிலில் சாட்சி கையொப்பம் செய்யும் பொழுது என்னுடைய மனைவியும் அங்கு தான் இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் இரண்டு பேரும் கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். உயிலில் நான் கையொப்பம் செய்வதற்கு முன்பு ஆவணம் முழுமையாக தயார் செய்யப்பட்டு இருந்ததா என்றால் முழுமையாக தான் தயார் செய்யப்பட்டு இருந்தது.

உயிலின் நகல் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு கடைசியாக உயிலை எப்பொழுது பார்த்தேன் என்றால் கையொப்பம் செய்த அன்று

தான் பார்த்தேன். கோபாலகிருஷ்ணன் இறந்த விவரம் எனது உறவினர் மூலம் எனக்கு தெரிய வந்தது. உயில் தொடர்பாக வாதியுடன் சார்பதிவாளர் அலுவலகம் சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் உயில் ஆவணத்தில் கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கோபாலகிருஷ்ணன் இறக்கும் பொழுது மாதவன் எங்கு இருந்தார் என எனக்கு தெரியுமா என்றால் திருப்பூரில் தான் இருந்தார். கோபாலகிருஷ்ணன் இறந்த போது மாதவன் திருப்பூரில் இல்லை என்றாலும் அவர் வருவதற்கு முன்பே கோபாலகிருஷ்ணன் உடல் எரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. உயில் ஆவணம் நான் சொன்ன இடம் மற்றும் நேரத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் அது உருவாக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68 மற்றும் இந்திய வாரிசு உரிமை சட்டம் பிரிவு 63 ன் கீழ் உயில் சட்டப்படி நிறைவேற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் செய்துள்ள கையொப்பம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.